## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.

## O.S.No.132/2019

2024 ம் ஆண்டு ஜூன் மாதம் 24 - ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.1 வாக்குமூலம் 1969 ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி திருமதி .A. சீதாலெட்சுமி, M.A.,B.L. மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் கூறப்பட்டு உறுதிகூறப்படுகிறது.

**நாள் 24.06.2024**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முத்துக்குமரன் | ஜாதி | : | |
| த /பெயர் | : | சிதம்பரம் | மதம் | : | |
| கிராமம் | : | | தொழில் | : | |
| வட்டம் | : | | வயது | : | |

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

**1.** தாவா சொத்தில் நான் நடவு செய்தபோது பிரதிவாதி அக்கிரமிப்பு செய்ய முயற்சி செய்தார் கடந்த 11.09.2018-ல் என் அப்பா எனக்கு செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்தார். அதற்கு பின்னர் நான் தாவா சொத்தில் அனுபவித்து வருகிறேன். அதற்கு முன் என் அப்பா அனுபவித்து வந்தார். கடந்த 2018-ம் வருடத்திற்கு முன்பு என் அப்பா தாவா சொத்தில் அனுபவித்தில் ,இருந்தார் என்பதற்குரிய வரி ரசீதை தாக்கல் செய்துள்ளேன். தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை நான் பார்த்தேன். பிரதிவாதி தரப்பில் எத்தனை ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளார் என்றால் வரிரசீதுகள் தாக்கல் செய்துள்ளார்.

2. தாவா சொத்திற்குண்டான சொத்து வரி ரசீதுகள் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ளதை நான் பார்க்கவில்லை. பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவண எண்.3-ல் புல எண்.19/1 ஏ என்ற தாவா சொத்திற்கு பிச்சைகண்ணு மகன் கணேசன் என்பவர் செலுத்திய சொத்து வரி ரசீது அசல் என்றால் கூட்டு பட்டாவில் இருக்கும்போது அவர்கள் பெயரில் வழுங்கப்பட்டுள்ளது. தாவா சொத்தில் 26 ஏர்ஸ் எங்களாலும், 2 1/2 ஏர்ஸ் பிரதிவாதி தரப்பிலும் வாங்கப்பட்டுள்ளது. ஆவண் எண்.4 முதல் 12 வரையுள்ள தாவா சொத்திற்குண்டான கிஸ்து ரசீது அசல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எங்களது பெயரிலுள்ள கிஸ்து ஆவணங்களை நான் தாக்கல் செய்துள்ளனே்.

3. பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவண் எண்.13-ல் கிராம நிர்வாக அலுவலர் 1423 பசலிக்கு வழங்கிய சிட்டா மற்றும் அடங்கல் என்றால் சரிதான். எனக்கு செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்தி கொடுத்தற்கு முன்னிட்டு பிரதிவாதி அனுபவத்தில் இருந்து வந்தது என்றாலும், அதை மறைத்து செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்து பாட்டி அஞ்சுகத்தம்மாள் பெயரில் தான் இருந்தது. அந்த சொத்தை எனது அப்பா பிரதிவாதி அப்பா கணேசன் என்பவரிடம் குழி 200/- என கிரையம் பேசி அதற்குண்டான அசல் ஆவணம் கணேசன் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அந்த ஆவணம்

பிரதிவாதி தரப்பில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த ஆவணம் மோசடியாக ஏற்படுத்தப்பட்டுள்ளது.

4. வாய்மொழி கிரையத்திற்கு பிறகு 30 ஆண்டுகளுக்கு மேலாக தாவா சொத்து பிரதிவாதியின் அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால்ச ரியல்ல. அதற்கு ஆதரவாக பிரதிவாதி தரப்பில் 1 முதல் 15 ஆவணங்களை தாக்கல் செய்துள்ளார் என்றாலும், அவை அனைத்தும் தாவா சொத்து பிரதிவாதியின் அனுபவத்திலிருந்து வந்தது என்பதை நிரூபிக்கும் விதமாக அமைந்துள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்தை வாய்மொழியாக கிரையம் பேசி அசல் ஆவணம் 1ம் பிரதிவாதி தந்தையிடம் ஒப்படைக்கப்பட்டது என்பது குறித்து என் அப்பாவை விசாரித்தால் உண்மை விவரம் தெரியும் என்றால் சரிதான்.

5. என் அப்பா 1ம் பிரதிவாதியிடம் அசல் ஆவணத்தை ஒப்படைத்ததை மறைக்கும் விதமாக எனது வழக்குரையில் கஜா புயலில் அந்த ஆவணம் காணமால் போய்விட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. என்னால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ. 2 மற்றும் 3 ஆகியவை கூட்டு உரிமையாளராக பிரதிவாதியின் தந்தையார் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தை நாங்கள் கிரையம் செய்து கொடுத்தால் தான் எந்தவித தொந்தரவும் செய்யாமல் இருந்து வருகிறோம் என்றால் சரியல்ல.

6. தாவா சொத்தின் அசல் ஆவணங்களில் என் பாட்டியின் பெயரில் இருந்ததால் மோசடியாக என் செல்வாக்கை பயன்படுத்தி என் பெயரில் செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்திக்கொண்டுள்ளேன் என்றால் சரியல்ல. அதனால் தான் அந்த ஆவணத்தை எற்படுத்திக்கொடுத்த முன்னோர்கள் இறந்துவிட்டதால் அதை சாதகமான பயன்படுத்திக் கொண்டுள்ளேன் என்றால் சரியல்ல. தாவா நிலத்திற்கு மேற்கு வடக்கில் அவர்களுக்கு சொந்தமான நிலம் உள்ளது. அதனால் தான் முன்னோர் காலத்தில் என் அப்பாவிடம் வாய்மொழியாக கிரையம் பேசி கிரையம் வாங்கினார்கள் என்றால் சரிதான்.

7. தாவா சொத்தை எந்த காலத்திலும் நான் அனுபவிக்கவில்லை என்றால் சரியல்ல. மோசடியாக தாவா சொத்தை அபகரிக்க வேண்டும் என்பதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளனே் என்றால் சரியல்ல. என் அப்பாவுடன் 2 சகோதரிகள் இருந்து இறந்துவிட்டார்கள். அவர்களுக்கு வாரிசுகள் உள்ளனரா என்றால் இருக்கிறார்கள். அவர்களை தவிர்த்து என் அப்பா பெயரில் மட்டும் பட்டா மாற்றம் செய்தது சரியல்ல என்றால் சரியல்ல. என் அப்பாவிற்கு மோசடியாக ஏற்படுத்தப்பட்ட பட்டாவை கொண்டு எனக்கு செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்திக் கொண்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து என் அப்பாவிற்கு மட்டும் பாத்தியப்பட்டதல்ல என்றால் சரியல்ல.

8.தனக்கு மட்டுமே உரிமையில்லா சொத்தை என் அப்பா என் பெயருக்கு செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. என் அப்பா பெயரில் ஏற்படுத்தப்பட்ட பட்டா , என் அப்பா எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணம் அதனடிப்படையில் எனது பெயரில்

வாங்கப்பட்ட பட்டா ஆகியவை மோசடியாக பெறப்பட்டது என்றால் சரியல்ல. உரிமையில்லாத சொத்தில் பெறப்பட்டா பட்டாவின் மூலம் பிரதிவாதி பெயரில் வழக்கு தாக்கல் செய்ய உரிமையில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு ஏதிராக நான் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கானது தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

(S/d. A.Seethalakshmi),
District Munsif
Mannargudi.